# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் தேதி பிற்பகல் 2.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.**

----

**பொருள் – 1**

நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி – 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி – 2019 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் – 3**

இந் நகராட்சி இயங்கி வரும் அனைத்து கணினிகளுக்கும் Desk Top antivirus and Server edition antivirus 2018–19ம் ஆண்டுக்கு புதுபிக்க செய்ய 3 நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி வரபெற்றது.

| வ. எண். | விவரம் | எண்ணிக்கை | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s Icom Solution, West Mambalam, Chennai -33 | 29 Nos<br>2 Nos | Rs.60,000/-<br>Rs.44,000/- |
| 2 | M/s SRT Data Solution, Tambaram, Chennai-45 | 29 Nos<br>2 Nos | Rs.69,600/-<br>Rs.45,000/- |
| 3 | M/s Soorya Trading Co., Kilpauk. Chennai - 10 | 29 Nos<br>2 Nos | Rs.84,100/-<br>Rs.51,000/- |

மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் M/s Icom Solution, West Mambalam, Chennai -33 அளித்துள்ள விலைப்புள்ளி மிகவும் குறைவாக இருப்பதால் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2) அவசரம் அவசியம் கருதி மேற்படி கணினிகளுக்கு antivirus புதுப்பிக்க 2018–19ம் ஆண்டுக்கு செய்து கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அதற்கு ஆகும் செலவின தொகை தோராயமாக ரூ.1.10 இலட்சத்திற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 4

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களக்கு மூன்றாண்டு குத்தகை உரிமம் முடிவடைவதால் ஆண்டு குத்தகை இனங்களுக்கு குத்தகை உரிமத்திற்காக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி 6.2.2018 ம் தேதியன்று நடை பெற்றது. மேற்படி விளம்பர அறிவிப்பு மாலைமுரசு தமிழ் நாளிதழில் 25.1.2018ம் தேதியன்று பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி செலவினத் தொகை வழங்க வேண்டியும், இனி வரும் 2019ம் ஆண்டிற்கு குத்தகை விளம்பர செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மேற்படி ஆண்டு குத்தகை இனங்களின் குத்தகை உரிமத்திற்கு ஏலம் விடப்பட்டு தற்போது குத்தகை உரிமம் குத்தகைதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கான செலவினத் தொகை வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் –5

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட சில வார்டுகளில் பெரிய வாகனங்கள் குப்பை எடுக்க முடியாத நிலையில் உள்ளதால் TATA ACE சிறிய வாகனங்கள் மூலம் எடுக்க 5 வாகனங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.10,000/– வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.3.00 இலட்சத்திற்கு நகர மன்ற தீர்மானம் எண். 691 நாள் 31.12.2018ல் அனுமதி வழங்கியதின்படி கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு | விலைப்புள்ளி படிவம் |
|---|---|---|---|
| 1 | திரு கே. வெங்கடேசலு, | ரூ.3.10 இலட்சம் | ரூ.825/– |
| 2 | திரு மோகன் | ரூ.2,99,900/– | ரூ.825/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களில் வரிசை எண். 2ல் உள்ள ஒப்பந்ததாரர் மோகன் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

**பொருள் – 6**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் வழிகாட்டின்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந் நகராட்சிக்குட்பட்ட பகுதியினை தூய்மையாக்கிட தினந்தோறும் அனைத்து இடங்களிலும் வீடு வீடாக சென்று குப்பைகளை பெற்று அதனை மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை உரமாக்கவும், மக்கா குப்பைகளை Pyrolysis முறையில் எரிப் பொருளாகவும் மாற்றப்படும் நிகழ்வினை இந் நகரில் உள்ள பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பள்ளி குழந்தைகளிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்த இதற்கான நாடக குழு அல்லது கிராமிய குழுக்கள் மூலம் பள்ளிகளிலும், தெரு முனைகளிலும்ட விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அதற்கான விலைப்புள்ளி பெறவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 7**

இந் நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை உலர் கழிவு மேலாண்மைக்கு நமது நகராட்சி குப்பை கிடங்கு தூக்குமர குட்டை இடத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணியினை செய்ய Enviro Energy என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி 8.12.2018 ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இந் நிலையில் இந்த Plant ஐ தொடங்கி வைக்க வரும் பிப்ரவரி 2019ம் தேதி அன்று ( Tentature data ) கூடாரம் அமைக்கும் பணி நடைபெற எதிர்பார்த்துள்ளதால் இந் நிகழ்ச்சியினை நடத்த கீழ்கண்டவாறு உள்ள செலவினங்களுக்கு தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) சாமியான
2) சிவப்பு கம்பிளி
3) பூங்கொத்து

4) காலை உணவு மற்றும் மதிய உணவு

5) டீ மற்றும் ஸ்நாக்ஸ்

6) பேனர்கள்

7) மேசை மற்றும் நாற்காலிகள்

8) மைக் செட்

9) ஐ.இ.சி

10) நினைவு பரிசுகள்

11) புகைப்பட கேமரா

12) இதர செலவுகள்

13) குடிநீர் தானியங்கி இயந்திரம் (ஏ.டி.எம் திறப்புவிழா அலங்காரம்)

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியம் நிமித்தமாக மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 8

இந் நகராட்சியில் தட்டச்சராக பணிபுரியும் திரு ஜெ. பாஸ்கரன் என்பவரை வந்தவாசி நகராட்சிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் டபள்யு.பி. எண். 1462/2012ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி பணியாளர் 30.4.2019 அன்று வயது முதிர்வின் காரணமாக பணியில் இருந்து ஓய்வு பெற உள்ளார். எனவே மேற்படி வழக்கிற்கு தற்போது நகராட்சி சார்பில் ஆஜராகவும் மீண்டும் கவுண்டர் புதியதாக தாக்கல் செய்வதற்கான வழக்கு கட்டணம் ரூ.15,000/– ஐ திருமதி பி. ராஜலட்சுமி, கூடுதல் அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்161.2012.சி1)

பொருள் – 9

செங்கல்பட்டு நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த திரு இராமசந்திரன், என்பவர் 27.8.2013ல் பணியிடை காலமானதால் அன்னாரின் வாரிசு மகன் திரு ஆர். விக்னேஷ் கருணை அடிப்படையில் தனக்கு பணி வழங்காதது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை தொடர்ந்து சென்னை உயர்நீதி மன்றத்தில் டபள்யு.பி.

எண்.15450/2018ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு இந் நகராட்சி மூலம் வழக்காடுவதற்கு ரூ.15,000/– ஐ திரு பி. சீனிவாஸ், உயர்நீதி மன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1749/2016/சி1)

பொருள் – 10

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் ஆடு அறுவை சாலை மற்றும் தினசரி காய்கறி நாளங்காடி மற்றும் மீன் நாளங்காடியில் வந்து செல்லும் லாரி மற்றும் வேன்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2015–16 முதல் 2018–19 வரை குத்தகை உரிமம் பெற்றுள்ளார். மேற்படி குத்தகை 31.3.2018 ம் தேதியில் குத்தகை உரிமம் முடிவுற்றுள்ளது. எனவே கீழ்கண்டவாறு குத்தகைதாரர் செலுத்திய ஏல பொறுப்பு தொகையினை திரும்ப வழங்குவதற்கான மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு எஸ். முனுசாமி, | ரூ.10,000/– |
| 2 | திரு எஸ். முனுசாமி | ரூ.25,000/– |

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 11

இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.5 காத்தான் தெருவில் சேதமடைந்த சாலையை புதுபிக்கவும் , மசூதிமலை தெருவில் தொடக்கத்தில் கல்வெட்டு அமைக்கவும் தோராய மதிப்பீடு ரூ.2.80 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 12

இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.11 சுந்தரவிநாயகர் கோயில் தெருவில் Day Care பள்ளி அருகில் சேதமடைந்த சாலையை அமைக்கவும், தெருவின் தொடக்கத்தில் பழுதடைந்த கல்வெட்டு அமைக்கவும் தோராய மதிப்பீடு ரூ.1.90 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 13**

இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 24 திருக்கழுகுன்றம் செங்கல்பட்டு சாலையில் இரயில் மேம்பாலம் அருகே போதிய மின் விளக்கு இல்லாத காரணத்தினால் விபத்து மற்றும் உயிர் சேதம் ஏற்படுகிறது. பொது மக்கள் நலன் கருதி அங்கே உயர் மின் கோபுர விளக்கு அமைக்க தோராய மதிப்பீடு ரூ.9.50 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை நகராட்சி பொது நிதி அல்லது திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 14**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 27 குண்டூர் தெருவில் பொது மக்க. பயன்பாட்டிற்காக சசமூநல சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் விதமாக நீர் ஆதாரத்திற்காக புதிய ஆழ்துளை கிணறு அமைத்திட தோராய மதிப்பீடு ரூ.2.60 இலட்சம் ஆகும். குடிநீர் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 15**

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குனர் அலுவலகம் தற்போது செங்கல்பட்டில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந் நிலையில் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குனர், செங்கல்பட்டு அவர்கள் 10.1.2019 ம் தேதியிட்ட கடித ந.க.எண். 275/2015–4 கடிதத்தில் செங்கல்பட்டு நகராட்சி பகுதியில் 22 செண்ட் (892 ச.மீ) இடம் ஒதுக்க கோரி செங்கல்பட்டு சார் ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் வழங்குவது குறித்து வருவாய் துறையின் பரிசீலனையில் உத்தேசித்திருப்பதாலும், மேற்படி இடம் செங்கல்பட்டு நகராட்சி வார்டு எண்6 பிளாக் எண்.14 ல் ச.எண். 2எ இல் (பழைய சர்வே எண்கள் மேலமையூர் கிராமம் 313/1எப, 313/1பி, 313/2ல் அமைவதாலும், மேற்படி இடத்தினை வருவாய் துறை மூலம் ஒதுக்கீடு செய்ய நகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் இயற்றி தர கேட்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குனர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து தர கேட்டுள்ள மேற்படியான இடம் தற்போது வருவாய் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இந் இடத்தினை

வருவாய் துறை மூலம் நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குனர் அலுவலகத்திற்கு நில மாற்றம் செய்து தருவதில் நகராட்சி ஆட்சேபனை இல்லை என தீர்மானம் இயற்றி அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2163/2018/எப்1)

பொருள் – 16

இந்நகராட்சி 2017—18ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி, கல்வி நிதி ஆகியவற்றுக்கு ஒவ்வொன்றும் 5 புத்தகங்கள் தட்டச்சு செய்து பிரின்ட் எடுக்க பைன்டிங் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றது.

1. ஜி சாப்ட் ஸிஸ்டம் – ரூ.44350/—
2. கர்ஸ்சர் சொலுயூசன்ஸ் – ரூ.44990/—

மேற்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் ஜி சாப்ட் ஸிஸ்டம் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 17

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் 2018—19ன் கீழ் Fuel Septage Treatment plant 30 KLD அமைக்க விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க ரூ.382.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. நகராட்சி தூக்குமரக்குட்டை உரகிடங்கு பகுதியில் ஏற்கனவே உள்ள குப்பைகளை அப்பகுதியிலேயே ஒதுக்கி மேற்கண்ட பணியினை மேறகொள்ளவும் மேற்குறிப்பிட்டுள்ள விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலமாமக அனுப்பவும் மன்ற பொருள் அனுமதிக்கும் மன்றத்தின் பார்வைக்கும் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 18

செங்கல்பட்டு நகராட்சிக்கட்பட்ட அனைத்து வார்டுகளிலும் உருவாகும் குப்பைகளை குப்பை கிடங்கு தூக்குமரகுட்டை இடத்தில் கொட்டப்பட்டு Pyrolysis பிளாண்ட் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் மூன்றாம் நபர் கம்பெனி பாதுகாப்பு ஆய்வாளர் பார்வையிட்டு பாதுகாப்பு சான்றிதழ் பெற்று அனுமதிக்கும், அதற்கு செலவாகும் தோரய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 19

இந் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் வீடுகள் தோறும் உருரூாகும் மக்கும் குப்பைகளை அந்தந்த பகுதிகளிலேயே உரமாக்கும் திட்டம் ஏற்கனவே 6 இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி அமைத்து செயல்பட்டு வருகிறது. மேலும் 6 இடங்களில் சின்டெக்ஸ் தொட்டி வைத்து உரமாக்க தோராய செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) பெரியமணியக்கார தெரு – 2
2) ஆதிலட்சுமி நகர் – 1
3) லியோ கார்டன் – 1
4) கண்ணன் நகர் – 1
5) நகர காவல் நிலையம் அருகில் – 1

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள்– 20

இந் நகராட்சி சொத்துவரி மறு சீராய்வு செய்யப்பட்டு கேட்புகள் அனைத்தும் கணினியில் முழுமையாக பதிவேற்றம் செய்யப்பட்டு அதற்கான சிறப்பு அறிக்கை (Special Notice) வரி விதிப்புதாரர்களுக்கு செங்கல்பட்டு அஞ்சல் அலுவலகம் மூலமாக சார்வு செய்யவும் அதற்கு ஒரு அறிக்கைக்கு ரூ.8/– வீதம் தோராயமாக 11500 வரிவிதிப்புதாரர்களுக்கு அறிக்கை அனுப்ப தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 21

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான தந்தை பெரியார் வணிக வளாகம் பின்புறத்தில் உள்ள காலிமனையில் இரு சக்கர வாகனம் மற்றும் மதிவண்டிகளிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்காக 31.1.2019 ம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்காணும் விவரப்படி குத்தகை தொகை கோரப்பட்டுள்ளது.

**சர்கார் மதிப்பு = ரூ. 7,00,000/–**

1) பொது ஏலம் – ஏலத்தில் எவரும் பங்கு கெகள்ளவில்லை.
2) ஒப்பந்தபுள்ளி – இரண்டு வரப்பெற்றுள்ளது.
   1) திரு கே. ராஜகோபாலன், க.எண். 20, ராகவனார் தெரு, செங்கல்பட்டு என்பவர் கோரிய ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2,21,000/– (ரூ.இரண்டு இலட்சத்து இருபத்தோராயிரும் மட்டும்)
   2) விமலாபாய் கன்ஸ்ட்ரக்ஷன், க.எண்.47–எ, மேலமையூர் பிள்ளையார் கோயில் தெரு, செங்கல்பட்டு என்பவர் ஒப்பந்தபுள்ளி தொகை ரூ.2,15,000/–(ரூ. இரண்டு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்.)

மேற்படி குத்தகை இனத்திற்கான சர்கார் மதிப்பு ரூ.7,00,000/– ஆகும். ஆனால் ஒப்பந்தபுள்ளியில் ஒப்பந்ததாரர்கள் கோரிய தொகை மிகவும் குறைவாக உள்ளது. இனால் இந் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மறு ஏலம் நடத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மறு ஏலம் நடத்தப்பட்டு அதன் மூலம் இந் நகராட்சிக்கு வருவாய் உயர்வு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. மறு ஒப்பந்தபுள்ளி கோர தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1235/2018/இ1)

பொருள் – 22

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய தட்டான்மலை மற்றும் புதிய தட்டான்மலை மற்றும் ரேடியோ மலை, TWAD புதிய திட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள மோட்டார் மற்றும் ஸ்டாட்டர், 5 உறிஞ்சு கிணறு பகுதிகளில் உள்ள மோட்டார்களின் பழுதினை உடனுக்குடன் சரி செய்ய வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 2019–20ம் ஆண்டில் பணி மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 23

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் விதத்தில் அரசின் வழிகாட்டுதல் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் அறிவுரையின்படியும் மாவட்ட ஆட்சியர் , காஞ்சிபுரம் அவர்கள் நிர்ணயித்துள்ள தினசரி ஊதிய விகிதத்தின்படி 50 டி.பி.சி சுய உதவிக்குழு மகளிரை கொண்டு நகரில் மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இதற்கான ஊதியம் மன்ற தீர்மானம் எண். 697 நாள் 31.12.2018ன்படி 20.1.2019 உடன் முடிவடைகிறது. நகரின் நலன் மற்றும் பொது மக்கள் நலன் கருதி இப் பணியினை மேலும் ஆறு மாத காலத்திற்கு (21.1.2019 முதல் 20.7.2019 முடிய) நீட்டிப்பு செய்துக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.16.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தற்போது பாராளுமன்ற தேர்தலை எதிர்நோக்கியுள்ள நிலையில் தேர்தல் நன்னடத்தை விதிகள் நடைமுறைக்கு வரும் நிலையில் உள்ளதாலும் நகரின் நலன் மற்றும் பொது மக்கள் நலன் கருதி 40 எண்ணிக்கை சுய உதவிக்குழு மகளிரை கொண்டு இப் பணி மேற்கொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2012/2016/எச்1)

பொருள் – 24

செங்கல்பட்டு நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் , ஓட்டுனர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள், பொறியியல் பிரிவு பணியாளர்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கு சீருடைகள் வழங்க அதற்கான செலவினம் ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற தீர்மானம் எண். 537 நாள் 31.7.2018ல் அனுமதி பெறப்பட்டு சீருடைகள் வாங்கப்பட்டு பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந் நிலையில் இதற்கான பில் தொகை ரூ.3,93,964/– க்கு வரப்பெற்றுள்ளது. எனவே வற்கனவே ரூ.3.50 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் கூடுதலாக செலவினத்திற்கு ரூ.0.50 இலட்சத்திற்கும் அனுமதிப் பெற மன்ற பொருள் ஒப்புதலுக்கு பணிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

அனுமதி அளிக்கலாம். (ந.க.எண். 2271/2018/எச்1)

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.